# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 28 புதன்கிழமை (13-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 249


# கப்பல் சேவை விவகாரம்: புலிகளுடன் பேச்சு தொடரும்!

## ஐ. நா. தூதரக அதிகாரி தகவல்

கொழும்பு ஓகஸ்ட் 13

மன்னாருக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பொதுமக்களுக்கான கப்பல் சேவை ஒன்றை நடத்துவது குறித்துதொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரத்தின் இலங்கை அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

மன்னாரில் சிக்கியுள்ள வடபகுதி அகதிகளை காங்கேசனுக்கு ஏற்றிச் செல்வதற்கான கப்பல் சேவையை நடத்துவது குறித்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததும் —

இதனையடுத்து இரு தரப்பும் பரஸ்பரம் ஒருவரை மற்றவர் குற்றம் சுமத்தும் பாணியிலான அறிக்கைகளை வெளியிட்டதும் —

தெரிந்தவையே.

எனினும் கப்பல் சேவை குறித்து புலிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்தப்படும் என அகதிகளுக்கான ஐ நா. தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ. நா. தூதரக அதிகாரிகளின் உயர் மட்டத் தூதுக்குழு ஒன்று தற்போது யாழ். சென்றுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் சம்பவங்கள்

### திருமலையில்

கொழும்பு, ஓக. 13

திருகோணமலை மாவட்டம் பெரியபுலம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் படையினர் மீது விடுதலைப் புலிகள் சிறிய ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த மோதலின் போது இரண்டு படைச் சிப்பாய்கள் காயமுற்றதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. (உ-4)

### கல்வயலில்

சாவகச்சேரி, ஓக. 13

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் நேற்றுக் காலை குண்டு வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. அதனையடுத்து துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது.

எனினும் இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

நேற்றுப் பிற்பகலில் குண்டு வெடிப்புச் சத்தம் கேட்ட பிரதேசம் படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உள்ளானது.

நேற்று முன்தினம் நண்பகலிலும் மட்டுவில் தெற்குப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-31)

### திரியாயில்

கொழும்பு, ஓக. 13

திருகோணமலை மாவட்டம் திரியாய்ப் பகுதியில் புலிகளின் நிலைகள் மீது நேற்று விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ-4-10)

### வன்னியில்

வவுனியா, ஓக. 13

நேற்றுக் காலை 6-35 மணிக்கு புக்காரா விமானம் ஒன்று வன்னி மக்கள் குடியிருப்புப் பகுதியில் ஒரே தடவையில் 12குண்டுகளை வீசியதாகவும் —

மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துவிட்டதால் உயிரிழப்புக்கள் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டதாகவும் —

'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

புளியங்குளத்திலேயே விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-164)

### கிளிநொச்சியில்

கொழும்பு, ஓக. 13

கிளிநொச்சிக்குக் கிழக்கே நேற்று முன்தினம் காலை 9. 15 மணியளவில் படையிருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் மேலும் நான்கு படையினர் காயமடைந்தனர், காயமுற்றோர் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக ''ரூபவாஹினி'' தெரிவித்தது. (உ-4)

## மட்டக்களப்பில் தாக்குதல்

மட்டக்களப்பு, ஓக. 13

மட்டக்களப்பு ரயில்நிலைய காவல் நிலையத்திற்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த விடுதலைப் புலிகள் அங்கு கடமையின் போது நித்திரை செய்து கொண்டிருந்த பொலீஸ்காரர் ஒருவரின் ஆயுதத்தைக் கைப்பற்றியதுடன் அப்பொலீஸ்காரரையும் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது மற்றும் இரு பொலீஸ்காரர் காயமடைந்தனர் எனவும் தெரியவந்தது. (உ-10-21)

# சர்வசன வாக்கெடுப்பு டிசம்பர் முதல் வாரம்?

கொழும்பு ஓக. 13

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் மற்றும் அரசமைப்புத் திருத்தம் ஆகியன தொடர்பாக பொது மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மக்கள் கருத்துக் கணிப்பை சர்வஜன வாக்கெடுப்பை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் வாரத்தில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது

மக்கள் கருத்துக் கணிப்பு நடத்துவது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஜனாதிபதி தேர்தல் ஆணையாளரைப் பணித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து மக்கள் கருத்துக் கணிப்புத் தொடர்பான பிரச்சார வேலைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி தமது கட்சிக்காரர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அரசியல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# விக்கிரமாதேவி பூங்காவில் புகைப்படம் எடுத்த 8 தமிழர்கள் கைது!

கொழும்பு விகாரமாதேவி பூங்காவின் கற்றாடலின் சந்தேகத்துக்கு இடமான முறையில் புகைப்படம் பிடித்ததாகக் கூறப்படும் எட்டு வடபகுதித் தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறுகொழும்பு கோட்டை நீதிவான் மேர்வின் காமினி ஜயசிங்க நேற்று உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம், கைதடி, வல்வெட்டித்துறை, பேசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப் பட்டிருக்கின்றார்கள். (உ-4)

# மன்னிப்புச் சபைக்கு முல்லை மீனவர் புகார்

அப்பாவி மீனவர்களை தமது அன்றாடத் தொழிலை மேற்கொள்ள விடாது ஸ்ரீலங்கா அரச படைகள் தாக்கிவருவதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் சார்பில் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

முல்லைத்தீவு மீனவர்களின் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கம் இது தொடர்பான முறைப்பாட்டுக் கடிதத்தை சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-164)

# பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில்!

கொழும்பு, ஓக. 13

தென்பகுதியில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பல பஸ் நிறுவனங்களின் ஊழியர்கள் 40 சத வீத சம்பள உயர்வு கோரி நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இதனால் தென்பகுதியின் போக்குவரத்துச் சேவைகள் பெரும் நெருக்கடி நிலையை அடைந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தில் கந்தளாய் சாலை ஊழியர்கள் மட்டும் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்திருந்தனர்.

அனேகமாக திருகோணமலை, அம்பாறை சாலைகளின் ஊழியர்களும் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி போக்குவரத்து அமைச்சுப் பதவியைக் கையேற்றதை அடுத்து இந்த வேலை நிறுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பலமிழந்து விட்டாலும் அவர்களை அழிக்க முடியாது

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 13

''விடுதலைப் புலிகள் இப்போது பலமிழந்துள்ளனர். ஆனால் இவர்கள் அழிக்கப்படக்கூடிய இயக்கம் அல்ல ஆகவே தான் தமிழ் மக்களுக்கு உரிய அடிப்படை உரிமைகளை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்''

இப்படி நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறினார்.

வெண்தாமரை இயக்கத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இன்று வடக்கு - கிழக்கு யுத்தத்துக்காக நாட்டின் மொத்த வருவாயில் 6 சத வீதத்தை செலவிடுகிறோம்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் யுத்தகாலத்தில் தமது மொத்த வருவாயில் ஆக் கூடியது 4 சத வீதத்தையே செலவு செய்துள்ளன.

இலங்கை யாரிய பொருளாதார முன்னேற்றத்தைக் காண யுத்தமே தடையாக இருக்கிறது. நாங்கள் அழிவுக்கு வழிவகுக்கும் யுத்தத்துக்கு பெருமளவில் செலவு செய்கிறோம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் 3 சடலங்கள் ஒப்படைப்பு

மட்டக்களப்பு, ஓக. 13

மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணைப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது இடம் பெற்ற சண்டையில் உயிரிழந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவரினதும் சடலங்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் மூலம் நேற்று புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தராகி' வந்து திரும்பியது

யாழ்ப்பாணம், ஓக. 13 மன்னாரில் இருந்து 293 பயணிகளுடன் 'தராகி' கப்பல் நேற்று காங்கேசன்துறை வந்து சேர்ந்தது.

காங்கேசன துறையில் இருந்து 83 பயணிகளையும் காரைநகரில் இருந்து வந்த ஒரு தொகுதி பயணிகளையும் அழைத்துக் கொண்டு இக்கப்பல் நேற்றே மன்னார் திரும்பியது- (உ-3)


உ

# குப்பிழான் கற்பக விநாயகர் ஆலய திருமுறை விழா

இடம்: குப்பிழான் கற்பகவிநாயகர் ஆலயம்
காலம்: 14 – 08 – 97 காலை 9. 00 மணி.
தலைவர்: சிவமகாலிங்கம்.

**நிகழ்ச்சிகள்:**

மங்கள விளக்கேற்றல்: திரு த: தருமலிங்கம்
கடவுள் வணக்கம்: திரு ஏ: அனுஷாந்தன்

ஆசியுரைகள்:
★ நல்லை ஆதீன முதல்வர்
★ சிவ ஸ்ரீ ந. உருத்திரமூர்த்திக் குருக்கள் —ஆலய பிரதம குரு

தலைமையுரை:
சிறப்புச் சொற்பொழிவு:
திரு சோ. பத்மநாதன்
(அதிபர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)

பண்ணிசைக் கச்சேரி:
தேவார இசைமணி திரு. இ. திருஞானசம்பந்தர்
ஓதுவார்: திரு. S. தில்லைமணி
நன்றியுரை: திரு: ந. சிவலிங்கம்

★ திருமுறை இன்பம் பருக அனைவரையும் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**

(48967)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
**சிவலிங்கம் இராசகுமாரி அம்மா**

ஜனனோதயத்தின் ஒளிவிளக்கே!
அரை வழியில் அணைந்ததேனோ?
என்றுமகலா நினைவுடன்
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

வீரகத்தி குடும்பத்தினர்.

''குமர கிரி''
குடமியன், வரணி. (47380)



சக்திவாய்ந்த கச்சிதமான
நம்பகரமான

# "டென்யோ" ஜெனரேட்டர்




**கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்**

★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ். சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 900/-
★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்
★ 2 கேவிஏ பெற்றோல் ரூபா 45, 000-/

கிடைக்குமிடம்:

**N. M. L. TRADERS**
என். எம். எல். டிரேடர்ஸ்
85, கொட்டா வீதி, பொரல்ல,
கொழும்பு - 8

தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 500737
(சி/842)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக: 13 மல்லாகம் நீலியர் பனைப் பிள்ளையார் கோயில் மஹோற்சவ விழா தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (இ-4)

★ ★ ★

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயில் ஆடிச்குளிர்த்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறும். இ-4)

★ ★ ★

கொழும்புத்துறை, ஓக. 13 பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த உற்சவத்தில் 5 ஆம் நாள் உற்சவமான இன்று பிற்பகல் 2- 30 மணிக்கு சப்பறத்திருவிழா இடம்பெறும். (இ-30)

## தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஓக. 13 திருகோணமலையிலிருந்து நேற்று காங்கேசன் துறை வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பலில் 98 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தபால் பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அதேநேரம் அக்கப்பல் மூலம் இங்கிருந்து 28 தபால் பொதிகள் அனுப்பப்பட்டன.

கொழும்பில் மேலதிக சிகிச்சையை பெறவேண்டிய நோயாளர்களும் இக்கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டனர். (உ-3-15)

## ஓய்வூதிய கொடுப்பனவு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களின் இம்மாத வவுச்சர்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் வேல் முருகன்பிள்ளை தெரிவித்தார்.

கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் கிராமிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும்— சம்பந்தப்பட்டோர் அவற்றைத் தத்தம் கிராமிய வங்கியில் பெறலாம் எனவும் — அவர் தெரிவித்துள்ளார்.

## பழையமாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 13 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.


எமது புதிய
வெளியீடுகள்!
லட்சுமி - ஸ்ருதி
இவர்களுடன்
பசு - பாம்பு நடிக்கும்
**துர்கா பூஜை**
அருண்பாண்டியன் - அப்பாஸ்
**ஆசைத் தம்பி**
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்
(48971)


# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரம் அமிர்தலிங்கம்

(தொலைபேசி இயக்குனர், அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பளை)

மாவிட்டபுரம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாக கொண்ட சிதம்பரம் அமிர்தலிங்கம் 12-08-97 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், நிலோஜனா, ஸ்ரீகரன், ஸ்ரீமோகன், ஸ்ரீரஞ்சன், ஸ்ரீகுகன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பூமணி, தர்மலிங்கம், மற்றும் சிவபாக்கியம், இராசலிங்கம் (சமாதான நீதவான் ஓய்வு பெற்ற பதிவேடு காப்பாளர் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13-08-97 இன்று காலை 10-00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

தகவல்
அ. ஸ்ரீகரன் (மகன்)

சுராஜ்லேன்,
சண்டிலிப்பாய். (C/1304)

## திருமதி அன்னபூரணம் தியாகராசா

மாவடி ஆலய வீதி, சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னபூரணம் தியாகராசா அவர்கள் 12 - 08 - 1997 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.வ. க. தியாகராசா (இளைப்பாறிய தொழில் அதிகாரி தொழில்திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், வினோதினி (U K), சுந்தரேசன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாதன், கோமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் வைஷ்ணவியின் அன்புப் பேர்த்தியும், சங்கானை இளையதம்பி செல்லம்மாவின் அன்பு மகளும், இ. சிவபாதசுந்தரம் (சிவம்). இ. சச்சிதானந்தம் (அராலி இந்துக்கல்லூரி ஆசிரியர்), இ. தியாகராசா (ஆசிரியர், காசிப்பிள்ளை மகா வித்தியாலயம், கல்வியங்காடு)- இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாவதி, தவமணி சச்சிதானந்தம் (ஆசிரியை), மகேஸ்வரி, சிவனேசன், அல்லையம்பதி, வ.க. சிங்காரம் (அளவெட்டி வடக்கு) பரிபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12 – 08 - 97 செவ்வாய்க்கிழமை நடைபெற்று. பூதவுடல் பிற்பகல் 1-00 மணிக்கு சங்கானை வழுக்கியாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
திரு. வ. க. தியாகராசா [கணவர்]

மாவடி ஆலய வீதி,
சங்கானை. (48948)

## திருமதி கார்த்திகேசு செல்லம்மா

(மண்டைதீவு)

மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இல. 426, கரியாலை, நாகபடுவானை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு செல்லம்மா 03- 08- 1997 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இளையகுட்டி - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, சின்னம்மா, கண்ணாத்தை, சதாசிவம், தில்லையம்மா, தில்லைவனம், கனகம்மா, மற்றும் நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் விஜயலெட்சுமி, மகாலட்சுமி, செந்திலெட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும் நித்திலெட்சுமி, காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் யோகநாதன், சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும், மலர்விழி, தேன்மொழி, ஸ்ரீமுருகன், ஸ்ரீகாந்தன், அருள்மொழி, கயல்விழி, சசிகலா, சசிகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), மன்மதன் (கனடா), பாலலோஜினி, பிரதீபன், மைத்திரேயி, பிரிந்தா, அருள்தீபன், சஞ்சீவன், குமாரலிங்கம் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், ரதீஸ்வரன், தர்சன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 08 - 1997 அன்று கரியாலை நாகபடுவானில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. சசிகலா (பேர்த்தி)

இல. 18, 6 ஆம் ஒழுங்கை,
சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (48969)

## திருமதி அனிசறோஜா றோச்

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யாழ். நகரில் வசித்தவரும் திருமதி அனிசறோஜா றோச் 10-08-97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற அல்பிறட் — மரியம்மா (மணி, பிரான்ஸ்) தம்பதிகளின் மகளும், றோச்சின் மனைவியும், றொஜிதா, சனிசியஸ்றொஜிவ் (யாழ். மத்திய கல்லூரி—98 கலை), செலன்றஜிதா (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13-8-97 அன்று காலை 10 மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்திலிருந்து இரங்கற் திருப்பலிக்காக புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றொஜீவ் (மகன்)

466/4, கோயில் வீதி,
முதலாம் ஒழுங்கை,
சுண்டிக்குளி. (48968)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சிஹானூக்கை சந்திப்பதற்கு ஹுன்சென் சீனா பயணம்

## கம்போடிய நிலைமையை விளக்குவார்

பீஜிங், ஓக. 13

கம்போடியில் திடீர் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி உள்ள கம்போடியாவின் இரண்டாவது பிரதமர் ஹுன்சென் கம்போடிய மன்னர் நொரடோம் சிஹானூக்கைச் சந்திக்க சீனா சென்றுள்ளார்.

அவருடன் நொரடோம் றணரித்தின் இடத்துக்கு முதலாவது பிரதமராக ஹுன் சென்னால் நியமிக்கப்பட்ட உங்ஹொட்டும் சென்றுள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட றணரித்தின் தந்தையாரான சிஹானூக் மருத்துவக்காரணங்களுக்காக சீனாவில் தங்கி உள்ளார்.

றணரித்தை முதலாவது பிரதமர் பதவியில் இருந்து நீக்கிய ஹுன்செனின் நடவடிக்கையை மன்னர் சிஹானூக் சீனாவில் இருந்தவாறு கண்டித்தது தெரிந்ததே.

அதே சமயம் கம்போடியாவில் சட்டபூர்வமான அரசு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட வேண்டும் என்று அமெரிக்காவும் கோரி இருந்தது. கம்போடியாவுக்கான பொருளாதார உதவிகளை நிறுத்தப்போவதாகவும் அமெரிக்கா அச்சுறுத்தி உள்ளது.

தற்பொழுது கம்போடியாவில் ஏற்பட்டுள்ள நிலைமையை விளக்கவே ஹுன்சென் தனது முதலாவது பிரதமருடன் சீனா சென்றுள்ளார் என்று நம்பப்படுகிறது.

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள நொரடோம் றணரித் தொடர்ந்து பாரிஸில் தங்கி உள்ளார் (இ)

## தாய்லாந்தில் தஞ்சம் அடைய இளவரசர் றணரித் திட்டமிடுகிறார்

நொம்பென், ஓக. 13

கம்போடியாவில் பதவி கவிழ்க்கப்பட்ட முதலாவது பிரதமர் இளவரசர் றணரித் தாய்லாந்தில் தஞ்சம் புகுவதற்கு திட்டமிட்டு வருகின்றார்.

அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றும் நோக்கத்துடன் கம்போடியாவின் வடபகுதி காட்டுப் பிரதேசத்தில் அவர் தனது ஆதரவாளர்களுடன் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப்பிரதேசத்துக்குப் பாதுகாப்போடு செல்வதற்கு தாய்லாந்து அதிகாரிகளுடன் றணரித் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக கம்போடியாவின் முன்னாள் நிதியமைச்சர் பிராங் றேசி தெரிவித்தார்.

றணரித் சென்றமாத ஆரம்பத்தில் கம்போடியாவில் இருந்து பாரிஸுக்கு தப்பிச் சென்றார் (இ-3)

# காஷ்மீர் பிரச்சினையில் தீர்வு எட்டப்படும்

## பிரதமர் குஜ்ரால் நம்பிக்கை

புதுடில்லி, ஓக. 13

தற்சமயம் நடைபெற்று வரும் பாகிஸ்தானுடனான பேச்சுக்களில் வெற்றி காணப்படும் என்றும்—

காஷ்மீர் குறித்த பிரச்சினையில் இரு நாடுகளும் ஒரு தீர்வைக் கண்டறியும் என்றும் — பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தியாவின் சுதந்திர பொன் விழாக் கொண்டாட்டத்தையொட்டி பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் குஜ்ரால் இவ்விதம் தெரிவித்தார்.

சென்ற ஆண்டில் பாகிஸ்தானுக்கு இந்தியா 50 ஆயிரம் தொன் சர்க்கரை விநியோகம் செய்ததையும்—

பதிலுக்கு பாகிஸ்தான் 30 ஆயிரம் மெகாவாட்ஸ் மின்சாரத்தை வழங்கியதையும் — குஜ்ரால் குறிப்பிட்டு இது இரு நாட்டு உறவுகளுக்கு நல்ல உதாரணங்களாகும் என்றார். (இ-3)

# ஷியா - சுனி முஸ்லிம்கள் மோதல் பாகிஸ்தானில் தொடர்கின்றது

## பரா இராணுவத்தினர் அழைப்பு

பாகிஸ்தானில் ஷியா — சுனி மதப்பிரிவினருக்கு இடையே நடந்து கொண்டிருக்கும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நூற்றுக்கணக்கான பரா இராணுவப்படையினர் முக்கிய நகரங்களில் நிலைகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

நாட்டில் பெரிய மாகாணமான பஞ்சாப் மாகாணத்தில் தற்போது இடம் பெற்று வரும் தொடர்ச்சியான படுகொலைகள் முழு நிர்வாகத்தையும் ஆட்டங் காண வைத்துள்ளன.

கடந்த வாரம் பள்ளிவாசல்கள் மீது நடந்த தாக்குதல்களிலும், மோதல் சம்பவங்களிலும் 40-க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

பாகிஸ்தானில் 50 ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்கள் சூடு பிடிக்கும் இந்த நேரம் இந்தச் சம்பவங்கள் அதிகரித்திருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# குண்டு வெடிப்புக்களை அடுத்து தமிழ் நாட்டில் பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை, ஓகஸ்ட் 13

தமிழ் நாட்டில் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றதையடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புக்களுக்கு உரிமை கோரியுள்ள "தமிழ்நாடு விடுதலைப்படை" தன் மீது கவனத்தைத் திருப்பும் முயற்சியாகவே இந்தக் குண்டு வெடிப்பை நடத்தியுள்ளதாக மாநில தலைமைப் பொலீஸ் அதிகாரி கே. ராஜசேகர நாயர் தெரிவித்தார்.

தமிழ்நாடு விடுதலைப்படை ஒரு காலத்தில் வலுவானதாகக் கருதப்பட்டது. ஆனால் அதற்கு பெருமளவிலான அடிப்படைத்தளம் மாநிலத்தில் இல்லை என்றும்—

எனினும் மீண்டும் அவர்களின் செயற்பாடுகள் தற்போது ஆரம்பித்துள்ளன என்றும்— அவர் தெரிவித்தார். (இ-3)

# ஜப்பானிய அரசுக்கு எதிராக சீனர்கள் வழக்குத் தாக்கல்

பீஜிங், ஓக. 13

இரண்டாவது உலகப் போரின் போது ஜப்பானின் இம்பீரியல் இராணுவத்தால் நடத்தப்பட்ட நோய் நுண்

## உலக அரங்கில்

மப் போர் முறைக்கு நஷ்டஈடாக சுமார் 100 கோடியே 80 இலட்சம் யென் தொகையை— அதாவது 95 இலட்சம் அமெரிக்க டொலரை— கோரி நூற்றுக்கும் அதிகமான சீனர்கள் டோக்கியோ மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் ஜப்பானிய அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

ஜப்பானிய இராணுவத்தின் 731 ஆம் பிரிவு 1939 ஆம் ஆண்டு தொடங்கி 3 ஆண்டு காலத்துக்கு நடத்திய நோய் நுண்மப் போரின் விளைவாக சீனாவில் பல பகுதிகளிலும் கொள்ளை நோய் பரவியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (இ-3)

# போடோ தீவிரவாதிகளால் அஸ்ஸாமில் 10 பேர் கொலை!

புதுடில்லி, ஓக. 13

அஸ்ஸாம் மா நிலத்தில் போடோ தீவிரவாதிகள் நேற்று முன்தினம் இரவு 10 பேரைச் சுட்டுக் கொன்றனர்.

லாகாபாடா கிராமத்தில் 7 பேர் கடப்பட்டனர். அவர்களை மரங்களில் கட்டி வைத்து தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

இன்னொரு சம்பவத்தில் ஆதிமோறா கிராமத்தில் இருந்து 4 பேர்களைக் கடத்திச் சென்று அவர்களையும் சுட்டுக்கொன்றனர்.

மூத்த பொலீஸாரும் சிவில் அதிகாரிகளும் கூடுதல் படைகளோடு சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

தீவிரவாதிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி தீவிரமாக்கப்பட்டுள்ளது. (இ-3)

# மேற்கு வங்கத்தில் வேலை நிறுத்தம்

புதுடில்லி, ஓக. 13

நாலாயிரத்துக்கும் அதிகமான தேயிலைத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி மேற்கு வங்காளத்தில் 3 நாள் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

மாநிலத்தின் வடக்குப் பகுதியில் உள்ள சுமார் 500 தேயிலைத் தோட்டங்களை இந்த வேலைநிறுத்தம் பாதித்துள்ளது.

வேலை நிறுத்தத்தால் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க விரைவில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன. (இ-3)

# நேபாளத்தில் மண்சரிவு; 19 பேர் பலி!

காட்மண்டு, ஓக. 13

நேபாளத்தில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து, ஏற்பட்ட மண்சரிவினால் குறைந்தது 19 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் தலைநகர் காட்மண்டுவில் இருந்து கிழக்கே 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலாம் மாவட்டத்தில் நீர்மின் நிலையம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த 14 பேரும் அடங்குவர்.

மண்சரிவின் போது பாறைகளினாலும் மண்ணினாலும் இவர்கள் மூடப்பட்டார்கள். உயிரிழந்த மற்றையவர்கள் வீடுகள் இடிந்தபோது அவற்றுக்குள் சிக்கி உயிரிழந்தனர். (இ-5)

# வியட்நாமியரை வெளியேற்ற ஹொங்கொங் அரசு முடிவு

ஹொங்கொங், ஓக. 13

ஹொங்கொங்கில் சட்டவிரோதமாகத் தங்கி உள்ள வியட்நாமியர்களை வெளியேற்ற ஹொங்கொங்கின் புதிய நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக 102 வியட்நாமியர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

1975 ஆம் ஆண்டு யுத்தம் மூலம் வியட்நாம் இணைக்கப்பட்ட பின்பு நூற்றுக்கணக்கான வியட்நாமியர்கள் தென் வியட்நாமில் இருந்து படகுகளில் வெளியேறி ஹொங்கொங் உட்பட பல நாடுகளுக்குச் சென்றனர். (இ)

# பம்பாயில் 30 ஆயிரம் சிறுவர் பேரணி

"வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் 55 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு 30 ஆயிரம்பாடசாலைச் சிறுவர்கள் பம்பாய் வீதிகளில் அணிவகுத்துச் சென்றனர்.

பிரிட்டனை இந்தியாவில் இருந்து வெளியேற்றும் காந்தியப் போராட்டத்தின் கடைசிஇயக்கமே இது ஆகும். (இ)

# மனிதச் சங்கிலி

இந்திய சுதந்திரப் பொன் விழா சிறப்பு நிகழ்வாக பம்பாயில் மாபெரும் மனிதச் சங்கிலி கடந்த ஞாயிறன்று நடைபெற்றது.

பெரியோர் முதல் குழந்தைகள் ஈறாக பம்பாய் வரை சுமார் 25 கிலோ மீற்றர்களுக்கு இந்த மனிதச் சங்கிலி நீண்டிருந்தது. (இ-5)

# தஜிகிஸ்தான் கூட்டணி படையிடம் முக்கிய தொழிற்சாலை வீழ்ச்சி!

தஜிகிஸ்தானில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் பிரிவுகளில் இருபிரிவுகள் இணைந்த கூட்டணியின் கை ஓங்கி உள்ளது.

தலைநகர் லுசாம்பிக்கு மேற்கேயுள்ள மிக முக்கிய நிலைகளில் ஒன்றான அலுமினியம் தொழிற்சாலை ஒன்றை இந்தக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

அரசுத்தலைவரின் காவலர் படையும், தளபதி சுகுறோ கஸிமோவுக்கு விசுவாசமான படையுமே இணைந்து சுமார் 50 கிலோ மீற்றர் பகுதியூடாகச் சென்று அலுமினியத் தொழிற்சாலையைக் கைப்பற்றி உள்ளன.

போட்டிப் படைகள் உஸ்பெக் பகுதியை நோக்கி பின் வாங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களின் தலைகளில் ஆப்கான் பாணியில் துணிகளைச் சுற்றிக்கொண்டும், பழைய ஆடைகளை அணிந்து கொண்டும் இப்படையினர் தொழிற்சாலைக்குள் நுழைந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பலவிதமான ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு இந்தப் படைகள் உட்சென்ற போது தொழிற்சாலை ஊழியர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும்—

தொழிற்சாலைக்குள் நுழைந்த படையினருடன் போட்டிக்குழுவினர் சண்டையிட்டனராயினும் பின்னர் சண்டையை நிறுத்தி உஸ்பெக்கிஸ்தானை நோக்கி பின் வாங்கினர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

தஜிகிஸ்தானின் மிக முக்கிய நிலையம் இந்த அலுமினியத் தொழிற்சாலை என்று கூறப்படுகிறது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலும் இந்தத் தொழிற்சாலை மிகப்பெரிய தொழிற்சாலையாக இருந்தது.

தேசிய செல்வத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிற்சாலையின் பங்கு முக்கியமானது.

இதுவரையில் இத்தொழிற்சாலை போட்டிக் குழுவிடம் இருந்தது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு- வாழைச்சேனை

# நெடுஞ்சாலையை மூட அரசு திட்டம்?

பாதுகாப்புக் காரணமாக மட்டக்களப்பு வாழைச்சேனை, நெடுஞ்சாலையை போக்குவரத்துக்கு மூட அரசு திட்டமிட்டுள்ளதாகச் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு — வாழைச்சேனை பாதையில் விடுதலைப்புலிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருவதாகவும்—

இதனால் படையினருக்கு சேதங்கள் ஏற்பட்டு வருவதாகவும்—

இதன் காரணமாகவே இந்தப் பாதையில் போக்குவரத்தைத் தடைசெய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இப்பாதை மூடப்பட்டால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்று கூறப்படுகிறது. (இ-3-164)

## ஆலயத்தில் துணிகரத் திருட்டு

திருநெல்வேலி, ஓகஸ்ட் 13

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியிலுள்ள அம்மன் ஆலயம் ஒன்றுக்குள் இரவு ஊரடங்கு நேரத்தில் புகுந்த திருடர்கள் அம்மன் விக்கிரகத்தில் அணியப்பட்டிருந்த சங்கிலியை திருடிச்சென்றுள்ளனர்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றது.

அத்துடன் ஆலயத்திலிருந்த விநாயகர் விக்கிரகத்தினதும், மற்றுமொரு விக்கிரகத்தினதும் அடிப்பாகத்தைப் புரட்டி அதிலிருந்த இயந்திரத்தகடுகளையும் திருடர்கள் எடுத்துச்சென்று விட்டனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலயத்திற்கு அண்மையிலுள்ள வைரவர் ஆலயம் ஒன்றிலும் அதே இரவு உண்டியல் பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டது. (இ-135)

## வடக்கு- கிழக்கு ஆசிரியர்களின் இடமாற்றம் ஜனவரியில்

திருகோணமலை, ஓக. 13

வடக்கு — கிழக்கில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் அமுலாகும் விதத்தில் இடமாற்றத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

வடக்கு — கிழக்கு மாகாண சபை கல்வியமைச்சு இத் திட்டத்தை நடை முறைப்படுத்த ஆசிரிய தொழிற் சங்கங்களுடன் ஆலோசித்து வருகிறது.

இடமாற்றத் திட்டத்தில் ஆசிரியர்கள் சேவைக்காலம், கஷ்டப் பிரதேச சேவை ஆகியன கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல வருடங்களாக இடமாற்றத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததால், பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவிருக்கிறது. (இ-150)

## சேவைநலன் பாராட்டு விழா

நவாலி, ஓக: 13

யாழ். செயலக ஓய்வூதியக் கணிப்புக் கிளையில் பணியாற்றி தற்போது ஆசிரிய நியமனம் பெற்றுச் சென்றுள்ள செல்வி ஜெயகீதா பாலகிருஷ்ணனுக்கும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகிச் செல்லவிருக்கும் கு. சூரியகுமாருக்கும் யாழ், செயலகத்தில் பிரிவுபசாரமும் சேவைநலன் பாராட்டு விழாவும் இடம்பெற்றன.

யாழ். செயலக பிரதம கணக்காளர் சு. சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ்; அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு அவர்களின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர். (இ-100)

## முகத்துவாரம், காக்கைதீவு பகுதிகள் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஓக. 13

கொழும்பில் முகத்துவாரம், காக்கைதீவு பகுதிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இராணுவ பொலீஸ் கூட்டுப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அதிகாலை முதல் வீடு விடாக நடந்த இத்தேடுதலின் போது வடக்கு — கிழக்கைச் சேர்ந்த 20 பேர் மேல் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பில் பல இடங்களில் பணி புரிபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## நெல்லியடியில் இன்று

யாழ்ப்பாணம் ஓக 13

உலகப் பிரசித்தி பெற்ற பாடகர் - பிரசங்கியார் அருட்தந்தை பேர்க்மான்ஸின் இன்னிசை நற்செய்திப் பெருவிழா இன்று புதன் கிழமையும் நாளை வியாழக் கிழமையும் பிற்பகல் 4.30 மணிமுதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (இ-4)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளைக்குப் பாராட்டு

'இலங்கையில் செயற்படும் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளில் சிறப்பாக இயங்கும் கிளைகளில் வவுனியா கிளையும் ஒன்று.'

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் ஈ.சுபசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியாக் கிளையின் விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இக்கிளையின் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசுகையில்—

''செஞ்சிலுவைச் சங்கம் குறித்து தவறான தகவல்கள் வெளிவந்தன. ஆனால் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சங்கம் திறம்படச் செயற்பட்டு வருகிறது. சமூகப்பணியே முக்கியம் என்ற கருத்தில் செயற்பட்டு வருகிறோம். எமது பணி தொடரும்'' என்றார்.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் உட்பட பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

வவுனியா கிளையின் தலைவராக எஸ். மார்க்கண்டும், செயலாளராக சிவநாதன் கிஷோரும், உபதலைவராக ரத்தினசிங்கமும், பொருளாளராக மயில்வாகனமும் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3-164)

## ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 15 பேரும் கடத்தல் குழுவைச்சேர்ந்தோரா?

### இரகசியப் பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஓக. 13

ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாகச் சென்று கடந்த மாத இறுதியில் நாடு கடத்தப்பட்ட 15 இலங்கையரும் கடத்தல் கோஷ்டி ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்,

ஆஸ்திரேலியாவின் வனாந்தரப் பகுதியில் தரையிறங்கிய 15 இலங்கையர்கள் ஆஸ்திரேலிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டதும் —

நீர்கொழும்பு நீதிவான் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்ததும் — தெரிந்தவையே

நீர்கொழும்பைச் சேர்ந்த இவர்கள் ஆஸ்திரேலியாவை தளமாக வைத்து கடத்தல் மேற்கொள்ளும் கோஷ்டியாக இருக்கலாம் எனச் சந்தேகம் கொண்டுள்ள இரகசியப் பொலீஸார் அவர்களை விசாரணை செய்து வருகின்றனர். (இ-3-21)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 12 இளம்விதவை குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கு ரூபா 10 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 13

கோப்பாய்பிரதேச செயலர் பிரிவில் 12 இளம் விதவைக் குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்காக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாதாந்த உதவிப்பணம் பெற்று வந்த இளம்விதவைப் பெண்களில் முன்னுரிமை அடிப்படையில் இவர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும்—

அவர்களின் சுயதொழில் திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளை செயலக சமூக சேவை உத்தியோகத்தர் என். இராசலிங்கம் மேற்பார்வை செய்வார் என்றும்- அவர் தெரிவித்தார். (இ-3)

## சாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக: 13

யாழ். மாவட்ட சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

அன்று காலை 11 மணிக்கு யாழ். மாவட்ட சாரணர்களுக்கான ஒன்று கூடல் ஒன்றும் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். (இ-3)


**மலிவு விற்பனை**

றெடிமேட் ரவுசர் சகல அளவிலும் விற்பனைக்கு உண்டு.

விலை ரூபா 250/-

சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(48966)

**காணி விற்பனைக்கு**

எழுதுமட்டுவாழ், மெசின் தோட்டத்துக்கு அருகாமையில் கண்டி வீதியோரமாக ''முசுறுகட்டி பனை'' நிலப்பரப்பு 32 விற்பனைக்குண்டு. எல்லைகள் கிழக்கு: கிரவல் தெரு, வடக்கு: புகையிரதப்பாதை, மேற்கு: கந்தையா தங்கராசாவுக்குரிய ஆதனம், தெற்கு: ஒழுங்கை.

தொடர்பு:
கா. நல்லதம்பியும்
பெண் இராசமணியும்
எழுதுமட்டுவாழ்.

(சி/1301)

**ஈசன் கல்வி நிலையம்**
கோண்டாவில்

பொது உளச்சார்பு
(GENERAL APTITUDE)

A/L 99

சகல பிரிவினருக்கும்

ஆரம்பம்: 14-08-97
வியாழன் மாலை 3 மணி

ஆசிரியர்: த. தவசேகர்
- நிர்வாகி

**தொழிநுட்பக்கல்லூரி இறுதிப் பரீட்சை - 1996 ஆங்கிலத்தேசிய தராதரப்பத்திரம்**

1996 ஆம் ஆண்டுக்குரிய மேற்படி ஆங்கிலத் தேசிய தராதரப் பத்திரப் (N·C.E) பயிற்சி நெறிக்கான இறுதிப் பரீட்சை 1997 - 08 - 19 ஆம் திகதி யாழ்ப்பாணத் தொழிநுட்பக்கல்லூரியில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் தமது மாணவ பிரவேச அனுமதிச் சீட்டுடன் தமது பகுதித் தலைவருடன் அன்றைய தினம் முற்பகல் 8 – 30 மணிக்கு தொடர்பு கொண்டு தமது பரீட்சைக்கான அனுமதிச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

க. ஜெயரெட்ணம்
அதிபர்

தொழிநுட்பக்கல்லூரி,
பிரம்படி வீதி,
கொக்குவில்.

(சி-1303)

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைத் தலைமையகம் 05.10. 1997 இல் நடைபெறவுள்ள ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தேர்வும் -97**

மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும், தேர்விலும் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் 30 பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம். கூட்ட அழைப்பிதழ் சென்ற கூட்ட அறிக்கை, கணக்கறிக்கை ஆகியன ஒவ்வொரு பிரிவுத் தலைவர் / செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும். பிரேரணைகள் இருப்பின், பிரிவுத் தலைவர்/ செயலாளரினால் 10-09.97க்கு முன்னதாக கிளைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

நியமனப் பத்திரங்கள் கிளைக் காரியாலயத்தில் 22. 09. 97- 26 09. 97 வரை பெற்றுக் கொள்ளலாம்

நியமனப் பத்திரத்தினை கிளைக் காரியாலயத்தில் 27. 09. 97 மு. ப 9. 30 - பி. ப 4 00 மணி வரை தாக்கல் செய்யலாம்.

தாக்கல் செய்த நியமனப்பத்திரத்தினை விரும்பிய வேட்பாளர்களினால் கிளைக் காரியாலயத்தில் 29. 09. 97 மு. ப 9 30 - பி. ப 4 00 மணி வரை வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்டுப் பொதுக்கூட்டமும், தேர்வும் 05, 10 1997 மு, ப 9. 30 மணி தொடக்கம் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மேலும் விவரங்களுக்கு கிளையுடன் தொடர்பு கொள்ளவும்,

கௌரவ செயலாளர்.
இ. செ. ச. யாழ். கிளை

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
11-08-97

[இ/1300]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் உள்ள அகதிகள் நிவாரணமேதும் இன்றி அவதி

மன்னார், ஒகஸ்ட் 13

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து மன்னார் பெரு நிலப்பரப்புக்கு வந்துள்ள மக்களில் 60 ஆயிரம் பேர் நிவாரணம் எதுவுமின்றி பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர் என்று மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம்—மடு அகதி முகாமில் உள்ள சுமார் 20 ஆயிரம் பேர் நிவாரண உதவி பெற்ற போதும், ஒழுங்காக நிவாரணம் கிடைக்காததால் கஷ்ட நிலையில் உள்ளனர்.

மன்னார் அரச அதிபர் எஸ். எம் குறூஸ் கடந்த வாரம் அப்பகுதிக்குச் சென்று மக்களின் பிரச்சினைகளை நேரில் ஆராய்ந்தார்.

அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க ஏற்பாடுகளை அவர் அங்கு செய்திருந்தார். (இ-3)

## திருமலையைப் பாதுகாக்க போதிய படையினர் இல்லை

வவுனியா, ஒகஸ்ட் 13

''திருகோணமலையை முழுமையாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க போதிய படையினர் இல்லை.''

இப்படி திருகோணமலை இராணுவ இணைப்பதிகாரி நிஹால் ஜெயக்கொடி தெரிவித்ததாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

கொழும்பு - அனுராதபுரம் வீதி, —

திருகோணமலை நகரம் முதல் குச்சவெளி கும்பன் கட்டு வரை —

திரியாய், ஈச்சிலம்பத்தை வரை — ஆகியவை படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆனால் அப்பிரதேசங்களைப் பாதுகாக்க படையினர் போதாமல் இருப்பதாக அவர் தெரிவித்தார். (இ-3-164)

## புனித பரலோக அன்னை திருவிழா

யாழ்ப்பாணம், ஒக. 13

கரவெட்டி பரலோக அன்னையின் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறும்.

கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆலய நவநாள் வழிபாடுகள் தொடர்ந்து 9 நாள்கள் நடைபெற்று எதிர்வரும் 15ஆம் திகதி திருவிழா முடிவு பெறும்.

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட் தந்தை சூ. அல்றின் அருளுரை வழங்கி வருகிறார். (இ-3)

## தவறுதலாக இடம் பெற்ற வேட்டினால் பயணிகள் பதற்றம்!

தென்மராட்சி ஒக 13

மிருசுவில் இராணுவ பொலீஸ் தடைமுகாம் முன்பாக பயணிகளுடன் வந்த வடபிராந்தியபோக்குவரத்து சபையின் பஸ் ஒன்று நிறுத்தப்பட்டு பயணிகள் இறங்கி சோதனைக்காக வரிசையில் சென்று கொண்டிருந்த வேளையில் திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

இதனால் பயணிகள் பதறியடித்து வீழ்ந்து படுத்துக் கொண்டனர்.

படை அதிகாரி ஒருவரின் வாகனம் வந்த போது இச் சம்பவம் இடம் பெற்றது.

படை அதிகாரி வந்த வாகனத்தைக் கண்டு படையினர் உஷார் நிலையில் செயற்பட்டபோதே காவலரணில் இருந்தபடை வீரரின் துப்பாக்கி வெடித்தது.

துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ரவைகள் படை அதிகாரியின் வாகனத்தின் இரு இடங்களை துளைத்துச் சென்றுள்ள போதிலும் அப்பகுதியில் பாதுகாப்பு வீரர்கள் இல்லாததால் உயிராபத்து ஏற்படவில்லை எனத் தெரியவந்தது.

ஒரு நிமிடம் தாமதித்து துப்பாக்கி வெடித்திருந்தால் காவலரணுக்கு முன்னால் வரிசையாக நின்ற பயணிகளுக்கும் உயிராபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-117)

## மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி

யாழ். மாவட்ட மலேரியா தடுப்பு இயக்க வைத்திய பொறுப்பதிகாரியாக டாக்டர் எம். எப். எஸ். மஹில் பதவி ஏற்றுள்ளார்.

கடந்த பல வருட காலமாக இப் பதவி நிரப்பப்படாது வெற்றிடமாக இருந்து வந்தது.

இதேவேளை யாழ். மார்பு நோய்ச் சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரியாக டாக்டர் எமில் கொடிபிலி நியமனம் பெற்றுள்ளார். (இ-135)

# யுத்தத்தின் மூலோபாயத்தை மாற்றிய கடல், தரைத் தாக்குதல் சம்பவங்கள்

கடல் வழி, வான் வழி பயணங்களுக்கு அச்சுறுத்தல் உருவானதை அடுத்து தரை வழிப் பாதையைத் திறக்க முயன்ற அரசுக்கு ''செய் அல்லது செத்துமடி'' (DO OR DIE) தாக்குதல்கள் மூலம் புலிகள் தலையிடியைக் கொடுத்துவருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்திலுள்ள கடற்பரப்பில் கடற்படையின் கை ஓங்குவதன் மூலம் புலிகளுக்கு அரசால் தலையிடி உருவானது. இவற்றின் விளைவுதான் தற்போது கப்பல் மற்றும் விமான சேவைகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை.

''யுக்திய'' சிங்களவார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

எதிர் வரும் நாள்கள் அச்சுறுத்தல் நிறைந்ததாக இருக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் ஊகம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலைமைக்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவதாக கடந்த சில வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் ஆகும்.

''செய் அல்லது செத்துமடி'' (Do or Die) தாக்குதல்கள் மூலம் இராணுவத்தின் மிகப் பெரிய நடவடிக்கையான ''வெற்றி உறுதி'' நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்த விடுதலைப் புலிகளால் முடிந்தது.

இரண்டாவதாக தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான இரு கப்பல்களை கிழக்கு மற்றும் மேற்குக் கடற்பரப்பில் கடத்தி அதில் ஒரு கப்பலுக்கு தீயிட விடுதலைப் புலிகளால் முடிந்தது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் எதிர்கால ஒட்டு மொத்த யுத்தத்தின் மூலோபாயத்தை மாற்றி அமைப்பதில் தற்போது விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுள்ளனர். இதனால் அரசின் உணர்வலைகள் எவ்வாறு அமையும்? இராணுவத்தின் தந்திரோபாயங்களில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை விடுதலைப் புலிகள் கூட உன்னிப்பாகக் கவனித்தபடி இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

### வானிலும் தடை

கடந்த காலச் சம்பவங்களை அவதானிக்கும்போது விமானப் படையும் கடற்படையும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து எதிர்நோக்கின. இதை ஈடு செய்ய அரசு ஒரு தந்திரத்தைக் கையாண்டது. அதாவது உக்கிரேன் மற்றும் கஸகஸ்தான் நாடுகளைச் சேர்ந்த விமானமோட்டிகளை ஈடுபடுத்தி விமான சேவையை அரசு நடத்தியது.

இதை அறிந்த விடுதலைப் புலிகள் உக்கிரேன் மற்றும் கஸகஸ்தான் நாடுகளை எச்சரித்ததுடன் இனிமேல் அந்த நாடுகளைச் சேர்ந்த விமானமோட்டிகள் இலங்கையின் விமான சேவைகளில் ஈடுபட்டால் விமானமோட்டிகளின் உயிருக்கு தாங்கள் பொறுப்பல்ல எனத் தெரிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் அந்த எச்சரிக்கை வெற்றியளிக்கும் விதத்தில் அந்த விமானமோட்டிகளால் செலுத்தப்பட்ட விமானங்களின் சேவை சிலநாள்கள் நிறுத்தப்பட்டது. இந்த நிலைமையானது இலங்கையின் வடபகுதிக்கான விமானப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் தெளிவான, கவனத்தில் கொள்ளக்கூடிய சவாலாக அமைந்தது.

அதே நேரம் ''வெற்றி உறுதி'' இராணுவநடவடிக்கையின் மூலம் தரைவழியாக வடக்கு நோக்கிச் சென்ற படையணிகளையும் பாரிய தாக்குதல்கள் மூலம் அவற்றின் முன்னேற்றங்களைக் கைவிடச் செய்வதில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுள்ளனர்.

இராணுவ உயர் அதிகாரிகளைப் பாதுகாப்பாக வடபகுதிக்குக் கொண்டு செல்லவும் அங்கிருந்து மீண்டும் கொண்டு வரவும் பாதுகாப்புத்துறையினருக்கு [illegible] பான விமான சேவை தேவைப்பட்டது. அத்துடன் இராணுவ யுத்த உபகரணங்கள் மற்றும் படையினரைக் கொண்டு செல்லவும் இராணுவத்திற்கு விமான சேவை தேவையாக இருந்தது.

இவ்வாறான விமான சேவை அதிக செலவினைக் கொண்டதாகவும் ஆபத்துகள் நிறைந்ததாகவும் இருப்பது தெளிவானதும் அரசு தரை வழிப் போக்குவரத்தை திறப்பதில் கவனத்தைச் செலுத்தியது. அதுவே ''வெற்றி

**தமிழாக்கம்: கஜனி**

உறுதி'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையாக அமைந்தது. இருப்பினும் 'செய் அல்லது செத்துமடி'' தாக்குதல்கள் மூலம் தரை வழிப் பாதையைத் திறப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளனர்.

### ஆழியிலும் அச்சுறுத்தல்

இதற்கிடையில் இதுவரை எதிர்நோக்காத அச்சுறுத்தலை விடுதலைப் புலிகளும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. தமது கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பில் கடற்படையின் கை ஓங்குவதே அந்த அச்சுறுத்தலாகும்.

விடுதலைப் புலிகளின் கடல் நடமாட்டங்கள் தொடர்பாக பாதுகாப்புத் துறையினருக்கு பல இரகசியத் தகவல்கள் கிடைத்தன. மேலும் விடுதலைப் புலிகளின் கடற்கலங்கள் கடற்படையினரின் பல தாக்குதல்களை எதிர்கொண்டன. இதனால் இதுவரை விடுதலைப் புலிகளுக்கு கணிசமான இழப்புகள் ஏற்பட்டன.

எனவே விடுதலைப் புலிகள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தேடினர். அந்தத் தீர்வை ''ஒரு கல்லால் இரு மாங்காய்களை வீழ்த்தும்'' எண்ணத்தைக் கொண்டதாக அமைப்பதில் விடுதலைப் புலிகள் கவனம் செலுத்தினர்.

இதன்படி கடற்படையினர் [illegible] பாதுகாப்பை வழங்கும் கடற்படைப் படகுகள் மீது தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டனர்.

ஆனால் அரசு தொடர்ந்து கடற்படைக் கலங்களைப் பயன்படுத்தாது தனியாருக்குச் சொந்தமான கப்பல்களை மட்டும் பயன்படுத்தி வடக்கிற்கு பொருள்களைக் கொண்டு சென்றது.

இவ்வாறு அரசு பயன்படுத்திய கப்பல்களில் ஒன்றுதான் ''மிசென்'' என்ற கப்பலாகும். இந்தோனேசியாவுக்குச் சொந்தமான இக் கப்பல் பெரும்பாலும் வன்னிப் பகுதியில் இருந்து மன்னார் சென்று முகாம்களில் தங்கியிருந்தோரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லவும் இராணுவத்திற்குத் தேவையான சில யுத்த உபகரணங்களை ஏற்றி இறக்கவுமே பயன்படுத்தப்பட்டது.

### மன்னாரில் இருந்து முல்லைத்தீவு வரை

தனது பணிகள் அனைத்தையும் முடித்துவிட்டு மன்னார் கடற்பரப்பில் நங்கூரமிட்ட நிலையில் இருந்த ''மிசென்'' கப்பலை விடுதலைப் புலிகள் கைப்பற்றித் தீயிட்டனர்.

இந்தச் சம்பவம் இடம் பெற்ற சில நாள்களின் பின்னர் விடுதலைப் புலிகள் கிழக்குக் கடற்பரப்பில் முல்லைத்தீவுக்கு அண்மையில் வெளிநாட்டுத் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல் ஒன்றைக் கடத்தினர். அதுவே 'மொறாங் பொங்' என்ற கப்பலாகும்.

அதுவரை அந்தக் கப்பல் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் பயணிகளைக் கொண்டு செல்லவும் யாழ்ப்பாணத்திற்குப் பல்வேறு பொருள்களை ஏற்றிச் செல்லவும் பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறான சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அந்தக் கப்பல்கள் இரண்டின் மீதும் தாக்குதலை மேற்கொண்டதன் மூலம் விடுதலைப் புலிகள் ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளனர். அதாவது வடக்கில் கப்பல்களின் போக்குவரத்தும், பொருள்களை ஏற்றியிறக்கும் பணியும் செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்கள் மூலம் மாத்திரமே மேற்கொள்ளலாம் என்பதே ஆகும்.

இந்நிலையில் யுத்தத்திற்குத் தேவைப்படும் உபகரணங்களையோ அல்லது படையினருக்குத் தேவையான உணவுப் பொருள்களையோ கப்பல்கள் மூலம் கொண்டு செல்ல முடியாது.

இந் நடவடிக்கையானது ஒருபுறத்தில் கடற்படையினரது உள உறுதியைக் குலைக்கிறது. மறுபுறத்தில் யுத்தம் தொடர்பான மேலதிகப் போக்குவரத்திற்கும் கடற்படையினரே தங்களது கடற்கலங்களை ஈடுபடுத்த நேரிட்டது. இதனால் கடற்படையினரின் ஆற்றல் சிதைவுறுகிறது. அத்துடன் இந் நிலைமை விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பான ஒரு நிலையை உருவாக்குகிறது. மறுபுறத்தில் கடற்படையினரின் ஆற்றல் இவ்வாறு சிதைவுற்ற பின்னர் அவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்வது விடுதலைப் புலிகளுக்கு சிரமமான காரியமாக இருக்காது.

விடுதலைப் புலிகளின் கடற் தாக்குதல்களானது ஏதோ சமூக, அரசியல் நோக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை அவர்களது திட்டங்களிலிருந்து அனுமானிக்க முடிகிறது.

அதன்படி வடபகுதிக்கான கடற் கலங்களின் பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டவுடன் வடக்கில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். அவ்வறான ஒரு நிலையில் வடபகுதி தமிழ் மக்களுக்கு உருவாகும் விரக்தி நிலை வலுப்பெற்று அரச எதிர்ப்பு அலையாக உருவெடுக்கும் என விடுதலைப் புலிகள் நினைக்கிறார்கள் என அவர்களது கடந்த காலச் செயற்பாடுகளை வைத்து சிந்திக்கும் போது நம்பமுடிகிறது.

இவற்றை எல்லாம் கவனத்தில் எடுக்கும் போது விடுதலைப் புலிகளின் கடல் தாக்குதல்கள்களானது யுத்த ரீதியான மற்றும் சமுதாய ரீதியான பிரதிபலனை எதிர்பார்த்து அமைந்துள்ளது எனத் தெரியவருகிறது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இளையதம்பி மல்லிகா தேவி என்பவரது 577971277X இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை, பாஸ், வைத்திய, பரீட்சை ஆவணங்கள் உட்பட யாழ். பஸ் நிலையத்தில் 9-8-97 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும், C/o வ. இளையதம்பி, கேரதீவு, நாவற்குழி, கைதடி.
[48950]

### மணமகள் தேவை

ஆசிரியர், 34 வயது மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். [48941]

### வீடு விற்பனைக்கு

பரி.யோவான் கல்லூரியின் முன்னாள் அதிபர் T. குணசீலனது, 12, சுவாட்ஸ் லேன், சுண்டுக்குளியிலுள்ள வசதியான வீடும், காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு J.J. அற்புதராஜா, 25, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி. [48955]

யாழ். கஸ்தூரியார் வீதியில், கின்னர் ஒழுங்கையில் அமைந்துள்ள மேல்மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. பானுகலா இல. 195B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[48954]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் சிறு குழுக்களாக ஆங்கிலம் பயில (எழுத, வாசிப்பதில் சிரம மானவர்க்கும்) ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சிரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(48957)

**G.A.Q - 98**
**பொருளியல்**
R. இராஜேஸ்வரன்
I. A. S.
ஆவரங்கால்
வியாழன், சனி-3-00மணி
(48953)

அரச பதவி
விண்ணப்பங்கள்
எழுது வினைஞர்,
ஆவணக் காப்பவர்,
கட்டட மேற்பார்வையாளர்
**பீற்றர் புத்தகசாலை**
சிறைக்கலையகம் அருகில்
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(48945)

### கண்டு எடுக்கப்பட்டது

09. 08. 97 அன்று யாழ்ப்பாணம் போக்குவரத்து பஸ்ஸில் தவறவிடப்பட்ட பேர்ஸுடன் சிறிதளவு பணம் கண்டெடுக்கப்பட்டது. தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

வீ. கந்தையா
(மணியம்)
ரஞ்சனா தியேட்டர்
அருகாமை)
வல்வெட்டி
(48947)

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

01. கழக உறுப்பினர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கான கூட்டம் 16-08-97 (சனி) புதிய நேரம் 3. 30 மணிக்கு நடைபெறும். அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.
02. புதிய தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 31- 08- 97 க்கு முன்னர் நேரில் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்.

வதிரி,
கரவெட்டி.
(சி/1298)

## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**அன்னா அன்னம்மா அம்பலவாணர்**
(அமரர் அருள்திரு. ஜே. பி. அம்பலவாணர் அவர்களின் துணைவியார்)
(ஆண்டவர் அரவணைப்பில் 15 - 08 - 1972)

''ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது''
(சங்கீதம் 116 : 15)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
வட்டுக்கோட்டை.
(48843)

## 46 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் கு. சிறீதரன்**

தோற்றம்: 30—10—1967
மறைவு: 29—06—1997

சொர்க்கமாக நான் நினைத்தது
நரகமாக மாறிவிட்டது
மரணமென்னும் தூதுவந்தது
மனிதன் எனும் வடிவில் வந்தது
நான் எடுத்த கருவியல்லவா
எனக்கு இன்று திரும்பி வந்தது
அடி ஆச்சி! நாச்சியாரே!!
என்னை உன்னடிக்கே
சேர்த்துவிட்டாய்!
தாயே! நன்றி!! நன்றி!!!

என்றும் உன் நினைவில் வருந்தும்:
- குடும்பத்தினர்

முதலியார் வளவு,
இமையாணன்,
உடுப்பிட்டி.
(48908)

## எக்சலன்ற்

புத்தூர்ச் சந்தி, மீசாலை.
தென்மராட்சியின் முன்னணி ஆசிரியர்களின்
ஒருங்கிணைந்த சேவையில்

**O/L** வினா விடை
**PAPER CLASS**
கணிதம்:- திரு. ந. கேதீஸ்
விஞ்ஞானம்:- திரு. எஸ். லலீசன்
ஆரம்பம்: 15 - 08 - 1997
வெள்ளி காலை 7 மணி
★ அலகு ரீதியான அச்சடித்த பாடக்குறிப்புகளும் வழங்கப்படும்.

**A/L 99** புவியியல்
பொருளியல்
பிரத்தியேக வகுப்பு
ஆசிரியர்:- திரு. நித்தி
ஆரம்பம்: 15 - 08 - 1997
வெள்ளி காலை 7 மணி
(48961)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

எமது சங்கத்தின் பென்ஸ் லொறியிலிருந்து கழற்றப்பட்ட பொடி மட்டும் விற்பனைக்குண்டு. தேவையானோர் காரியாலய நேரத்தில் பார்வையிட்டு கோரும் விலையைக் குறித்து தபால் உறையின் இடது பக்கத்தில் ''கூறு விலை'' எனக் குறிப்பிட்டு பொது முகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம்'' என விலாசமிட்டு 23-08-97 ஆம் திகதிக்கு முன் அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

11-08-1997.
(சி/1299)

## கண்ணீர் அஞ்சலி


தெல்லிப்பழை ப. தெ. வள அ. கூ.
சங்கப் பணியாளர்
திரு. மா. வரதராசா அவர்களின் தந்தையார்
**அமரர் சிதம்பரம் மாரிமுத்து**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நெறியாளர், பணியாளர், அங்கத்தவர்.
தெல்லிப்பழை ப. தெ. வள. அ. கூ. சங்கம்
(48952)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்: 19 — 10 — 1931



அஸ்தமனம்: 06 — 08 — 1995

அமரர்
**ஆறுமுகம் கல்யாணசுந்தரேசன்**
(B. A. Dip-in-Ed., in-Drama)
(முன்னாள் பிரதி அதிபர்,
யா/மெமோறியல் ஆங்கிலபாடசாலை)
திதி: 13—08—1997

நல்லைக் கந்தன் திருவடியே,
அல்லல் தீர்க்கும் அருமருந்தென
நல்லைக் கந்தன் உற்சவ வேளை—அவன்
இல்லிடம் தேடிச் சென்றனையோ?

அன்புடன் நினைவு கூரும்
மனைவி
(48921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கஷ்டப் பிரதேசக் கட்டாயம்

சகல ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேசங்களில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்களாவது கட்டாயமாகப் பணிபுரிய வேண்டும் என்ற விதிமுறையைக் கொண்டு வரவுள்ளதாககல்வி அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

ஆசிரியர் சேவை மூலம் கிடைக்கும் அனைத்து சலுகைகளையும் சகல ஆசிரியர்களும் அனுபவிக்கின்றார்கள். ஆகையால் சகலஆசிரியர்களும் கஷ்டப் பிரதேசங்களிலும் பணியாற்ற வேண்டும் என்று அமைச்சர் அதற்குப் விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக இரண்டு முறைப்பாடுகள் ஆசிரியர் தரப்பிலிருந்தும், கஷ்டப் பிரதேசங்களின் பெற்றோரிடம் இருந்தும் நீண்ட காலமாகவே வந்து கொண்டிருக்கின்றன.

கஷ்டப் பிரதேசங்களுக்குப் பணிக்கு அனுப்பப்படும்பல ஆசிரியர்கள்மூன்று வருடங்களுக்கு அதிகமாக, ஆறு அல்லது ஏழு வருடங்கள் இடமாற்றம் இன்றி தொடர்ச்சியாகச் சேவை ஆற்ற வேண்டி உள்ளது. அதனால் போக்குவரத்து, தங்குமிட வசதியின்மை, உணவுப் பிரச்சினை ஆகிய பல அசௌகரியங்களை குறிப்பிட்ட சில ஆசிரியர்களே அனுபவிக்க நேரிடுகிறது—இது முதலாவது முறைப்பாடு.

கல்வி அலுவலகங்கள், அமைச்சுக்களில் ''தெரிந்தவர்கள்'' இல்லாத, செல்வாக்குப் பயன்படுத்த முடியாதவர்களே இவ்வாறு கஷ்டப்படுகிறார்கள்.

ஆனால், கஷ்டப் பிரதேசங்கள் என்றால் என்ன என்பது அனுபவத்தில் தெரியாத ஆசிரியர்களே மிகப் பலர். கஷ்டப் பிரதேசங்களுக்கு மாற்றம் வராமல் பார்த்துக் கொள்ளும் 'கெட்டித்தனம்' உள்ளவர்கள், கல்வி அலுவலகங்களில் ''புகுந்து விளையாடக்'' கூடியவர்கள், கஷ்டப் பிரதேசங்களை எட்டியும் பார்த்ததில்லை. இன்னும் ஒரு சாரார் பெயருக்கு ஒரு சில மாதங்கள் அங்கு பணியாற்றி விட்டு, அதிகாரிகளின் கையைக் காலைப்பிடித்தேனும் வசதியான இடங்களுக்கு மாற்றம் பெற்று விடுகின்றனர்.

இதனால் ஏற்படும் ஆசிரியர் பற்றாக்குறையால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாகக் கஷ்டப் பிரதேசங்களைச் சேர்ந்த பெற்றோர் குறைப்படுவது நீண்ட கால விவகாரம்.

நகரப் பாடசாலைகளுக்கும், கிராமப் பாடசாலைகளுக்கும் இடையே நிலவும் ஏற்றத் தாழ்வை, வசதி-வளங்கள் வேறுபாட்டை நீக்கப் போவதாக பதவியில் இருக்கும் கல்வி அமைச்சர்கள் வாய் ஓயாமல் கூறுவர். ஆனால் அப்படி ஒரு சமநிலை எப்போதாவது உருவாகுமா என்று எண்ணத் தோன்றுமளவுக்கே செயற்பாடுகள் நிகழ்கின்றன. எல்லாம் வாய்ப் பேச்சளவில் தான்!

சகல ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிவது கட்டாயமாக்கப்படுமாயின், பாரபட்சமின்றி, அரசியல் தலையீடு இன்றி, அதிகாரிகளின் தான்தோன்றித் தனத்திற்கு இடங்கொடாமல் செயற்படுத்தப் படுமாயின், நகர, கிராமப் பகுதிப் பாடசாலைகளுக்கு இடையேயான பெரும்இடைவெளியைக் குறைப்பதற்கு எடுத்து வைக்கப்படும்.முதலாவது காலடியாக அமையும்.

திருமலையில் காத்திருக்கும்

# யாழ். அரச ஊழியர்கள் மன்னார் ஊடாக வருவர்

திருகோணமலை, ஓக. 13

யாழ். வருவதற்காகத் திருகோணமலையில் காத்து நிற்கும் யாழ். மாவட்ட அரச ஊழியர்களை மன்னார் ஊடாக யாழ்ப்பாணம் அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலைத் தயாரித்து, மன்னார் அரச அதிபருக்கு அனுப்பி, மன்னாரில் இருந்து சேவையில் ஈடுபட்டுள்ள கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அவர்களை அனுப்ப திருகோணமலைப் பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வேலும்மயிலும் முயற்சி எடுத்து வருகின்றார்.

அதே நேரம் —

அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி மற்றும் மாகாண விளையாட்டுப் போட்டி ஆகியவற்றுக்கு திருமலைக்கு வந்து இன்னமும் யாழ்ப்பாணம் திரும்ப முடியாத நிலையில் உள்ள — எஞ்சிய — யாழ். மாணவர், ஆசிரியர்கள் 72 பேரையும் விமானம் மூலம் யாழ். அனுப்ப மாகாணக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுநடத்த மாகாணக் கல்வியமைச்சை சேர்ந்த இரு அதிகாரிகள் கொழும்பு சென்றுள்ளனர். (உ-3)

## கொழும்புக்கு அனுப்பப்பட்டார்

நெல் குற்றும் இயந்திரம் வெடித்ததால் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பொன்னம்பலம் காண்டீபன் (வயது 22) என்ற இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக நேற்று கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

வரணி எருவன் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது வாசகர் அறிந்ததே. (உ-15)

## கூடைப்பந்தாட்ட போட்டிகள்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் வருடாந்த கூடைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4.00 மணி:- யாழ். பல்கலைக் கழக ஜோல்ட்ஸ் அணி எதிர் பற்றீஷியன்ஸ் அணி.

★ 5.00 மணி:- உதயன் அணி எதிர் யாழ். சுயாதீன அணி. (உ)

## மரணம்

அரியாலையில் கடந்த 7 ஆம் திகதி அடுப்பு பற்றவைத்த வேளை தீப்பற்றி எரிந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கணவன் — மனைவி இருவரில் கணவன் நேற்று மரணமானார்.

வீரகத்தி சத்தியசீலன் (வயது 51) என்பவரே சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தவராவார். மனைவி ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சை பெற்று வருகிறார்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பின் உறவினர்களுடம் ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

## மா, பாண் விலைகள் அதிகரிப்பு

கோதுமை மாவின் விலை கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலைஉயர்வு உடனடியாக அமுலுக்கு வரும் என்றும்—

உலக சந்தையில் மாவின் விலை உயர்ந்ததே இவ் விலை உயர்வுக்குக் காரணம் என்றும் — உணவு ஆணையாளர் என்.ஈ. லியனா ராச்சி தெரிவித்துள்ளார்.

மா விலை ஏற்றத்தை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பாணின் விலை 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## குஜ்ராலுக்கு அழைப்பு

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுமாறு இந்தியப் பிரதமர் ஐ.கே. குஜ்ராலுக்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்துக்கும் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டங்களில் தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா கலந்துகொள்வார்.

எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி கொழும்பு வரும் மண்டேலா தென் ஆபிரிக்க சுதந்திரப் போராட்டம் குறித்த சொற்பொழிவொன்றை அங்கு நிகழ்த்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர தின பொன்விழா நிகழ்ச்சிகள் கண்டியிலுள்ள தலதா மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறவுள்ளன.

சுதந்திரதினப் பொன்விழாவில் பிரிட்டிஷ் இளவரசா சார்ள்ஸும் கலந்து கொள்வுள்ளார்.

நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## திருக்காட்சி இனிக்குதையா!

முருகா உன் நிழல்கோடி சுகந்தருமென்பேன்
முன்பு நாமெல்லாம் நல்லூர் அகன்று நாவற்குழியில்
நலிந்தே மெலிந்து இல்லிடமின்றி இன்னலுறும்
போதும்

நல்லூரான் திருவடியை நாம் மறந்ததில்லை
அப்பாடா இன்று அப்பன் சுவாமியருள்
தப்பாமல் பெற்றிடவே தமியேம் ஒருங்கிணைந்தோம்
முக்கனியும் தேனும் முத்தீனும் கரும்பதுவும்
தித்திப்பது போலவன்றோ திருக்காட்சி
இனிக்குதையா!

★ ★ ★

தப்பாமல் சார்வதுதான் தரணியிலே முருகன்தாள்
எக்காலும் இடர்களையும் இருமையிலும் இன்பதுவே
செக்கச் சிவந்தழகா சேயிழையாள் வள்ளியொடு
குஞ்சரியும்

பக்கத் துணையாக பவனி வரும் போதினிலே
மிக்க பேரானந்தமது மேவுதடா மஞ்ஞஞ்யூர்
சொக்க நாதா உன் குக்குடந்தான் சொல்லுமொழி
எங்கள் இன மொழியே இன்பத் தமிழ் மொழியே
பங்கீந்திர் பக்தர்களைக்காரி பரவசமாய்
வாழ்வதற்குப் பாரினிலே!

- கோ. சி. வேலாயுதம்

# கிருஷாந்தி கொலை வழக்கு: விசாரணை 8 ஆம் திகதி

யாழ். மாணவி கிருஷாந்தி மற்றும் மூவர் கொலை தொடர்பான 'ட்ரயல் அட் பார்' விசாரணை அடுத்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

மூன்று நீதிபதிகள் முன் விசாரணையில் முதல் சாட்சியாக யாழ். நகர கமாண்டராக இருந்த பிரிகேடியர் ஜயசுந்தரவும், இரண்டாவது சாட்சியாக யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரனும் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மேலும் பத்துப் பேருக்கு சாட்சியமளிக்க வருமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (உ-3)

வவுனியாவில் உள்ள

# அகதிகளை திருமலை அனுப்ப வேண்டாம்!

## பிரதேச செயலர் கோரிக்கை

திருகோணமலை, ஓக. 13

யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவில் காத்திருக்கும் அகதிகளை திருமலைக்கு அனுப்ப வேண்டாம் என்று திருமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் வேலும்மயிலும் வவுனியா அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

யாழ். செல்வதற்காக வவுனியாவில் இருந்து திருமலை வந்த 750 அகதிகள் கப்பல் வசதியின்றித் திருமலையில் உள்ள அகதி முகாம்களில் கடந்த ஒன்றரை மாதங்களாகப் பெரும் இன்னல்படுவதாகவும் —

கப்பல் சேவை குறித்து முடிவு எதுவும் இல்லாத நிலையில் மேலும் அகதிகளை திருமலைக்கு அனுப்ப வேண்டாம் என்றும்— அவர் கேட்டுள்ளார். (உ-150-3)

## சட்டப்படி வேலை

கொழும்பு, ஓக. 13

ரயில்வே சாரதிகள் நாளை மறுதினம் முதல் சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப் படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

புதிய சம்பளத் திட்டம் கொண்டுவரப்பட்டு ஒரு வருடமாகியும் இன்னும் அது அமுலாகவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் சரிவராத பட்சத்தில் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

## அழியும் நிலையில் சந்தன மரம்

கொழும்புத்துறை, ஓக. 13

பளை — தம்பகாமம் பகுதியில் அழியும் நிலையில் உள்ள சந்தன மரங்களைப் பாதுகாக்குமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சைவாலயத்தில் நடைபெறும்கிரியைகளுக்கு தேவையான சந்தன மரங்களை பாதுகாக்குமாறு அப்பகுதி பிரதேச செயலகம் உட்பட சைவமன்றங்கள், பொது அமைப்புகள் ஆகியவற்றிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-30)

## கள் பரிசோதிக்கும் கருவி

திருநெல்வேலி, ஓக. 13

யாழ். மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கள் பரிசோதிக்கும் கருவியான ''எபிலியோ மீற்றர்'' எனப்படும் நவீன கருவி விரைவில் கிடைக்கவுள்ளது.

வடமாகாண தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் கொழும்பிலிருந்து மேற்படி கருவி, பிளாஸ்ரிக் பரல்கள், மற்றும் அலுவலக உபகரணங்கள் ஆகியவற்றை கப்பல் மூலம் இங்கு கொண்டுவந்து அங்கத்துவ சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. (இ-135)

## இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 13

கோப்பாய் பிரதேசத்தில் கடந்த வருடம் பெய்த பெரும் மழையாலும், காற்றாலும் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் முன்னுரிமை அடிப்படையில் 50 குடும்பங்களுக்கு இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் வைத்து நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இக் கொடுப்பனவுக்காக வடக்கு — கிழக்கு மாகாண சமூகநலத்துறை அமைச்சு இரண்டு லட்சத்து 11 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தது. (உ-3)

## ஆங்கில வகுப்பு

கொழும்புத்துறை, ஓக. 13

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தினமும் மாலை 3 மணி முதல் ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வகுப்பில் பங்குபற்ற விரும்பும் மாணவ, மாணவிகளை ஆதீனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-30)

## ஏ. ஆர். வி. ஊசி மருந்து வந்து சேர்ந்தது

திருநெல்வேலி ஓக. 13

யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியத்துக்கு ஏ. ஆர். வி. எனப்படும் விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்துகள்செஞ்சிலுவை சர்வதேச கப்பல மூலம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை உட்பட பல்வேறு அரச வைத்தியசாலைகளுக்கு இந்த ஊசி மருந்துகள் பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குழந்தைப் பிள்ளைகளுக்கு போடப்படும் நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளும் வந்து சேர்ந்துள்ளன. (இ-135)

## நாளை

**ஆடி 29**

வியாழக்கிழமை

திதி: ஏகாதசி பின்னிரவு 12.56 வரை.

நட்சத்திரம்: கேட்டை காலை 7.26 வரை;

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 7.35 - 9.05

ராகுகாலம்: 1.35 -3.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழ்மக்கள் தாங்கள் நாட்டின் ஏனைய மக்களுடன் சரி சமமாக நடத்தப்படவில்லை என்று குறை கூறுவதுடன் தலைநிமிர்ந்து ஏனைய பிரஜைகள் போல் வாழ முடியவில்லை என்று மனம் வருந்துகிறார்கள். ஆகவே அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அரசமைப்பில் புதுமைகள் செய்யப்பட்டுள்ளன. அந்த அரசமைப்பைத் தழுவி இலங்கைக்கேற்ற விதத்தில் சீர்திருத்தம் செய்கின்றோம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

20 ஆம் திகதி தொடக்கம்

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு

கொழும்பு, ஓக. 13

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் கலை மற்றும் வர்த்தக பாடங்களின் விடைத்தாளகளை மதிப்பீடு செய்யும் வேலை இம் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தினர் தங்களது சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய மறுத்துள்ளதால்—

விஞ்ஞான நிகளுக்கான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் வேலை அடுத்த மாதம் 7 ஆம் திகதியே ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10-164)

## சர்வசன...

(முதலாம் பக்கத் தொடர்)

தீர்வுத் திட்டம் குறித்தும், அரசு மக்கள் கருத்துக் கணிப்பை நடத்த முற்பட்டால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது குறித்தும் ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக்கட்சி தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது. (உ-10)

இலங்கை விவகாரம்:

# மத்தியஸ்த எண்ணம் இந்தியாவுக்கு இல்லை!

## பிரதமர் குஜ்ரால் தகவல்

புதுடில்லி, ஓக. 13

'இலங்கையின் உள்நாட்டுப் போரில் மத்தியஸ்தம் செய்யும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லவே இல்லை.'

— இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவின் சுதந்திரப் பொன் விழாவையொட்டி அமெரிக்க சி. என். என். தொலைக்காட்சிக்கு அளித்த நீண்ட — சிறப்புப் பேட்டியிலேயே இந்தியப் பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். (உ-4)

## விடப்பட்ட பொதிகள்

மன்னாரிலிருந்து நேற்று முன்தினம் காங்கேசனுக்குப் புறப்பட்ட 'தராகி' பயணிகள் கப்பலில் பயணம் செய்த பயணிகளின் 12 பொதிகள் மன்னாரில் தவறுதலாகக் கப்பலில் ஏற்றப் படாமல் விடப்பட்டு விட்டதாகவும்—

அடுத்த கப்பல் சேவையில் பாதுகாப்பாக அப்பொதிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும்—

மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஒய்வூதியர் ஏமாற்றம்

உள்ளூராட்சி ஒய்வூதியர்களின் ஓகஸ்ட் மாத ஒய்வூதிய வவுச்சர்கள் நேற்று முன்தினம் வந்துள்ள போதிலும் இக்கொடுப்பனவுக்குரிய காசோலையும், பட்டியலும் வங்கிகளுக்கு வராததால் நேற்று ஒய்வூதியம் பெறுவதற்காக வங்கிக்கு வந்த ஒய்வூதியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்த ஒய்வூதியர்களின் ஜூலை மாதத்திற்குரிய வவுச்சர்கள் ஒய்வூதியர்களுக்கு ஜூலை மாதம் எட்டாம் திகதி வந்த போதிலும் இதற்கான காசோலையும் பட்டியலும் ஜூலை 22 ஆம் திகதியே வங்கிகளுக்கு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உள்ளூராட்சி விதவை ஒய்வூதியர்களின் ஜூலை மாதத்திற்குரிய காசோலையும் பட்டியலும் கடந்த வெள்ளிக்கிழமை வங்கிகளுக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## பஸ் ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தம் உருவாகியிருப்பதும் —

பௌஸி சுகாதார அமைச்சராக இருந்த போது டாக்டர்கள், தாதியர் அடிக்கடி வேலை நிறுத்தத்தில் குதித்ததும் —

குறிப்பிடத்தக்கவையாகும். (உ-4-10-21)

## கப்பல் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்)

அக்குழு தனது யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு வன்னி செல்லவிருக்கின்றது. அக்குழு வன்னி சென்றதும் அக்குழுவில் உள்ள உயரதிகாரிகள் சிலர் கப்பல் சேவை குறித்து வன்னியில் புலிகளின் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)


# கடை விற்பனைக்கு

இல:- 251 K. K. S. வீதியில் அமைந்திருக்கும் 96 அடி நீளமும் 19 அடி அகலமும் கொண்ட மாடியுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு. வங்கியில் கடன் எடுத்துத் தீர்க்கப்பட்டது. [H.N.B. JAFFNA] தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

**150, 152 ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி **2252** [சி/1306]

# வீடு விற்பனைக்கு

இலக்கம் 20 ஸ்வார்ட்ஸ் லேனில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு. காணியின் விஸ்தீரணம் இரண்டு பரப்பு கச்சேரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி, யாழ். போதனா வைத்தியசாலை யாவும் 250 மீட்டர் அண்மையில் உள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. விவரங்கட்கு,

**150, 152 ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி **2252** (சி/1305)

எமது புதிய வெளியீடு!

கல்கி, சுருதி, லட்சுமி

## துர்க்கை பூஜை

## சுப்ப ஸோ வீடியோ,

**யாழ்ப்பாணம்.**

குறிப்பு: வீடியோ சீ.டியில் இருந்து நேரடியாகப் பதிவு செய்யும் ஒரே ஒரு நிறுவனம்.

(சி/1307)

## இன்று முதல்

# இன்னிசை நற்செய்திப் பெருவிழா

## உலகப் பிரசித்தி பெற்ற பாடகர் -- பிரசங்கியார்

# அருட்தந்தை பேர்க்மான்ஸ் அவர்கள்

| இடங்கள் | காலம் | நேரம் |
|---|---|---|
| ★ நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானம் | 13 - 14 | பிற்பகல் 4 - 30 |
| ★ செல்லமுத்து விளையாட்டு மைதானம் மானிப்பாய் | 15 - 16 | பிற்பகல் 3 - 30 |
| ★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மைதானம் யாழ்ப்பாணம் | 17 - 18 | பிற்பகல் 4 - 00 |
| ★ சாவகச்சேரி நகரசபை மைதானம் நவீன சந்தை பின்புறம் | 19 - 20 | பிற்பகல் 3 - 30 |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**பிரவேசம் இலவசம்!**

(48935)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org